Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 271

வியாழக்கிழமை 24 ஓகஸ்ட் 2023

ஆவணி 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## குருந்தூர்மலை விவகாரம் அமெரிக்கா தீவிர அவதானிப்பு

### மிகச்சிக்கலான பிரச்சினை – அமெரிக்கத்தூதர் வியாக்கியானம்

### அமைதியான தீர்வுக்கு அழுத்தம்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24**

**குருந்தூர்மலை விவகாரத்தை அமெரிக்கா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இந்த விவகாரத்துக்கு இலங்கை அரசாங்கம்விரைவாகத்தீர்வுகாணாவிட்டால்மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுக்கக்கூடும்.** »11



## மனிதப் புதைகுழி விடயத்தில் சர்வதேச நாடுகள் அக்கறை!

### அரசு நினைத்தவாறு செயற்பட முடியாது என்கிறார் ஜூலி சங்

யாழ்ப்பாணம், ஓக.24

இலங்கையில் கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பாக அமெரிக்கா தீவிர கரிசனை கொண்டுள்ளது. கொக்குத் »09

### யாழ்ப்பாணத்தில் நேற்று

## அமெரிக்கத்தூதுவர் சங் பல தரப்புகளுடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஓக.24

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். பலாலி விமான நிலையம் ஊடாக »09

## இனக்கலவரம் ஏற்படும் ஏதுநிலை இலங்கையில்

### அமெ. தூதுவரிடம் சுட்டிக்காட்டிய சிவில் சமூக அமைப்புகள்

யாழ்ப்பாணம், ஓக.24

இலங்கையில் இனக்கலவரம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று வடக்கு மாகாணத்திலுள்ள சிவில் சமூக »09

## வடக்கின் அபிவிருத்திக்கு அமெ. அதிகபட்ச ஆதரவு!

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஜூலி சங்

### வடக்கு நிலைமை தொடர்பில் ஆளுநரிடம் கேட்டறிவு

யாழ்ப்பாணம், ஓக.24

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு அமெரிக்கா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்துக் »11

## இடர் நிலைமையை உணர்ந்து நீரைச் சிக்கனமாகப் பாவியுங்கள்

### யாழ். மாவட்டச் செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.24

தற்போது நிலவும் வறட்சியான காலநிலைமையால் எழுந்துள்ள இடர்நிலைமையைக் கருத்தில் கொண்டு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த »09

## சந்திரனில் 'விக்ரம்' சாதித்தது இந்தியா

புதுடில்லி, ஓக.24

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம் லேண்டர்' சந்திரனில் வெற்றிகரமாக நேற்றுத் தரையிறக்கப்பட்டது என்று இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ »11

## சண்டிலிப்பாயில் சண்டித்தனம் இரு இளைஞர்கள் நேற்று கைது!

யாழ்ப்பாணம், ஓக.24

சண்டிலிப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்து மோட்டார் சைக்கிள்களுக்கு தீயிட்டு, வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

## முல்லைத்தீவுடன் சேர்க்கப்பட்ட அநுராதபுரத்தின் 'சம்பத்நுவர'

முல்லைத்தீவு, ஓக.24

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் அநுராதபுரம் கமநல அபிவிருத்தித் திணைக்கள நிர்வாகத்தின் கீழ் இருந்த சம்பத்நுவர கமநல சேவை நிலையம் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. »11



## பிக்குகளின் அடாவடியை கண்டித்துப் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக.24

மயிலத்தனைமடுவில் சர்வமதத் தலைவர்களும், ஊடகவியலாளர்களும் பௌத்தபிக்குகளால் தடுத்து வைக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு, திருமலை வீதியில் உள்ள அமெரிக்க மிஷன் மண்டபத்துக்கு »11

## சபையில் அமளிதுமளி இரு எம்.பி.க்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஓக.24

நாடாளுமன்றத்தில் வாய்மூல கேள்வி பதில் நேரத்தில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து, நேற்று இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதி சபாநாயகரால் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். »11

## சிறப்புரிமைத் துஷ்பிரயோகம் வீரசேகரவின் மீது நடவடிக்கை

### நாடாளுமன்றில் வலியுறுத்தினார் சுமந்திரன்



கொழும்பு, ஓக.24

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்ற சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்கின்றார். அவர் மீது சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மயிலத்தனைமடுவில் குழப்பம் விளைவித்தவர்கள் கைது »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இதுவரை 370 படுகொலைகள்!



## அராஜகம் பெருகுகிறது என டலஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

**இந்த ஆண்டில் இதுவரை நாட்டில் 370 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. நாடு அராஜக நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் மாதாந்தம் 40 முதல் 50 வரையிலான படுகொலைகள் இடம்பெற்று வருகின்றன.

போதைப்பொருள் வியாபாரம், காணிப்பிரச்சினை, தகாத உறவு போன்ற காரணிகளால் இடம்பெற்று வரும் மனித படுகொலைகளைத் தடுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையென்ன? நாடு தற்போது அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாகரிகமற்ற மனித சமூகம் வாழும் நாடாக மாறியுள்ளது .- என்றார். (ச-ரி2)

# ஜூலை கொடுப்பனவு திறைசேரி விடுவிப்பு!

கொழும்பு, ஓக. 24

சிறுநீரக நோயாளர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுக்கான நிதி திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அனைத்து மாவட்டச் செயலகங்களுக்குமென 2 ஆயிரத்து 684 மில்லியன் ரூபா மாற்றப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை முன்னரைப் போலவே முதியோர் கொடுப்பனவு அஞ்சல் அலுவலகங்களிலும், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளின் கொடுப்பனவு பிரதேச செயலகங்களிலும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச-இ)

# இலங்கைக்குச் சீனாவால் தொடர்பாடல் வாகனங்கள்

கொழும்பு, ஓக. 24

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட அதிநவீன தகவல் தொடர்பாடல் அமைப்புகளுடன் கூடிய வாகனங்கள் இலங்கை இராணுவத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு சீன அரசாங்கத்துக்கும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த வாகனங்கள் இலங்கை இராணுவத்திடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம)

## சிசு சாவு, கர்ப்பப்பை அகற்றம்;

# சுகாதார அமைச்சின் நடவடிக்கை ம. உ. ஆணைக்குழு விளக்கம் கோரியது

கிளிநொச்சி, ஓக. 24

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட இளம் தாயின் சிசு உயிரிழந்ததுடன் தாயாின் கர்ப்பப்பையும் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சிடம் விளக்கம் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பம் சார்பில் கணவரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டில் "எனது குழந்தை இறந்தமைக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

எனது மனைவியிடமோ என்னிடமோ கேட்காது மனைவியின் கர்ப்பப்பை அகற்றியமைக்கு நீதிகிடைக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பதிலளிக்குமாறு மத்திய சுகாதார அமைச்சிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் கோரியுள்ளது. (ச-27)

# கொடுப்பனவு வழங்கலில் ஒரு நிலைப்பாடு இல்லை

## பயனாளிகள் அலைக்கழிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை அஞ்சல் அலுவலகத்துக்கு அல்லது சமுர்த்தி வங்கிக்கு என கொடுப்பனவுகளை மாற்றி மாற்றி வழங்குவதால் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு நீண்டகாலமாக அஞ்சல் அலுவலகங்களிலேயே வழங்கப்பட்டு வந்தன.

அரசின் அறிவிப்பின் பிரகாரம் இந்தக் கொடுப்பனவுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அவர்கள் வாழும் எல்லைப்பரப்பிலுள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு மாற்றப்பட்டன.

அதன்பிரகாரம் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்பட்டது.

பின்னர் பயனாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த நவம்பர் டிசெம்பர் மாதங்களில் மீண்டும் அஞ்சல் அலுவலகத்தில் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கடந்த ஜனவரி தொடக்கம் மீண்டும் சமுர்த்தி வங்கிக்கு கொடுப்பனவுகள் மாற்றப்பட்டன. இந்தநிலையில் மீண்டும் அஞ்சல் அலுவலகம் மூலம் கொடுப்பனவு வழங்கத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

நிலையில்லாது ஓரிடத்தில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஒழுங்கமைக்காது திணைக்களம் செயற்படுவதால் தாம் அலைக்கழிக்கப்படுவதுடன் பெரும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுக்க நேரிடுவதாக பயனாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-9)



# உள்ளூர் முட்டைகளில் விரைவில் தன்னிறைவு

## அரசாங்கம் ஏற்பாடு

கொழும்பு, ஓக. 24

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் உள்ளூர் முட்டையில் நாடு தன்னிறைவு அடையும். அதற்கமைய உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 30-35 ரூபாவாக குறைத்து முட்டை இறக்குமதியை நிறுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது;

உள்ளூர் முட்டைகளை 60-65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதனைக் கட்டுப்படுத்த முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

அதன்படி நாளாந்தம் 10 லட்சம் வீதம் இதுவரை 750 லட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

நாடளாவிய ரீதியில் சதொச மற்றும் பல்பொருள் அங்காடிகளில் ஒரு முட்டை 40-45 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது முட்டை இறக்குமதியை இடைநிறுத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் உள்ளூர் முட்டையில் தன்னிறைவு கண்டு உள்ளூர் முட்டை ஒன்றின் விலையையும் 30-35 ரூபாவாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)


# 6 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தென்மராட்சியில் வீட்டுத்திட்டம்

சாவகச்சேரி, ஓக. 24

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் 6 பேருக்கு சமுர்த்தி வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களில் மூவருக்கு புதிய வீடுகள் அமைக்க தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மற்றைய மூவருக்கு பூர்த்திசெய்யப்படாத வீடுகளைத் திருத்த தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் தவசிக்குளம், மந்துவில் வடக்கு, கைதடி குமரநகர், வரணி, நாவற்காடு, மீசாலை கிழக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கே இந்த வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. (ச-ரி-9)



# வவு.பொலிஸ் அத்தியட்சகர் மாற்றம்: குற்றச்செயல்களுக்கு உடந்தையா?

## திலீபன் எம்.பி. கேள்வி

வவுனியாவில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களை களைந்து நடவடிக்கைகள் முன்னெடுத்த வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இது குற்றங்கள் புரிவோருக்கு உடந்தையான செயற்பாடா? இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியாவில் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கிராமங்கள் தோறும் முறைப்பாட்டுப் பெட்டிகள் அமைக்கப்பட்டு போதைப்பொருள் விற்பனை செய்பவர்கள் இனங்காணப்பட்டனர். வாள்வெட்டுகள் ஒடுக்கப்பட்டன எனப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தார்.

இந்தநிலையில் குற்றங்களை கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட அவர் இடமாற்றம் செய்யப்பட்டமை முறையற்ற செயலாகும். குற்றங்கள் புரிவோருக்கு உடந்தையான செயற்பாடே இதுவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணக் கம்பஸுக்கு ம்பவும் 'சக்கர்' எண்டு பெடியள் சொல்லுற ராசிரியர் சற்குணராசா தெரிவு செய்யப்பட்டது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். ஆனால் இந்தமுறை ஆர் அடுத்த துணைவேந்தர்? எண்டு மேலிடத்தில இருந்து அறிவிப்பு வரும்வரைக்கும் , 'சக்கருக்கு' எதிரா நடந்த குத்துவெட்டுகள் மாதிரி முந்தியொருக்காலும் நடக்கேலை. அதுவும் கம்பஸோட எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு வெளியாள் தான் இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் காரணமாம்.

யாழ்ப்பாணம், அரியாலையில இருக்கிற ஒரு ட்ரைவர் தான், சக்கருக்கு எதிரா நடந்த சதியளுக்கு சூத்திரதாரியாம். நம்ப ஏலாத விசயம் தான், ஆனால் நம்பத்தான் வேணும். கம்பஸில உள்ள லெக்சர்ஸ்மார், செனட்காரர், கம்பஸ் பெடியள் எண்டு எல்லாரையும் ஏதோ வகையில கதைச்சு, அவையை 'சக்கருக்கு' எதிரா வேலை செய்யச் சொல்லி இந்த ட்ரைவர் கேட்டிருக்கிறார். கம்பஸ் பெடியளுக்கு தண்ணிப் பார்ட்டி வைச்சு, கம்பஸ் முழுக்க 'சக்கர்' பற்றி பிழையான கதையளைப் பரப்பச் சொல்லியும் இந்த ட்ரைவர் தூண்டினவராம். ஆனால் அந்தப் பார்ட்டிக்கு போன பெடியளில கனபேர் , தண்ணியடிக்கும் மட்டும் அந்த ட்ரைவர் சொல்லுறதுக்கெல்லாம் 'ஓமண்ணை செய்யலாம்' எண்டு சொல்லிப் போட்டு, விடிஞ்சதும் அதை மறந்திட்டாங்கள். துணைவேந்தரா சக்கர் தெரிவாயிட்டர் எண்டதும் முதலில வெடி கொளுத்தின பெடியளில, அந்த சதிப்பார்ட்டிக்கு போன ஆக்களும் உள்ளடக்கம். இதிலையே அவங்கள் சக்கருக்குத்தான் விசுவாசம் எண்டது தெரிஞ்சிட்டுது.

சரி, இப்பிடி ஒருத்தரை துணைவேந்தரா வரவிடக்கூடாது எண்டதில ஏன் வெளிச்சக்தியள் தீவிரமா நிண்டதுகள்? காசை ஏன் இப்பிடி 'தண்ணியா' செலவழிச்சவை? எண்ட கனக்க கேள்வியள் எழும்பும். அதுக்கும் காரணம் இருக்கு. எதையும் மனதுக்குள்ள வைச்சிருக்காமல், எல்லாத்தையும் பட்பட்டெண்டு வெளியில கொட்டிடுவார். ஆர் என்ன பிழை செய்தாலும் எல்லாருக்கும் முன்னாலை வைச்சு கிழிச்சுத் தொங்க விட்டிடுவார். காசிலையும் ஆசையில்லை. அதால மற்றவை காசடிக்கவும் விடமாட்டார். இதெல்லாம் எப்பிடி அங்க உள்ளவைக்குப் பிடிக்கும்? 'சக்கர்' துணைவேந்தரா இருக்கும் மட்டும் தாங்கள் நினைச்சபடி காசு அடிக்க முடியாது. வேற பிழையளும் செய்ய ஏலாது. அதைவிட மேடையில ஈவிரக்கம் பாக்காமல் சக்கர் எல்லாரையும் தோலுரிக்கிற மாதிரித்தான் கதைப்பார். இது பக்கத்து நாட்டுக்கும் கடும் சிக்கலாப் போட்டுது. ஏனெண்டால் அவையின்ர கன திட்டங்களுக்கு சக்கர் மண்ணள்ளிப் போட்டதோட, அதுகளைப் பற்றியும் வெளியில சொல்லிப்போட்டார். அதாலதான் எல்லாரும் சேர்ந்து வெளியில உள்ள ஒரு ட்ரைவரை சூத்திரதாரியாக்கி, சக்கரைப் பற்றி இல்லாத பொல்லாத கதையெல்லாம் பரப்பி , மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கட்டுக்கட்டாப் 'பெட்டிசங்கள்' போட்டு தலையால கிடங்கு கிண்டினவை. ஆனால் தர்மம் 'சக்கரையும்' காப்பாத்தி கம்பஸையும் மூண்டு வருசத்துக்கு காப்பாத்திப் போட்டுது.



- பட்சி

## இன்சுலின் இறக்குமதி

நாட்டில் தட்டுப்பாடு நிலவிய 2 லட்சத்து 75 ஆயிரம் இன்சுலின் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட இன்சுலின் மருந்துகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மருந்து விநியோகத் துறையில் தட்டுப்பாடு நிலவும் மருந்துகளின் எண்ணிக்கை 231ஆகக் குறைவடைந்துள்ளது. தட்டுப்பாடு நிலவும் 38 வகையான மருந்துகள் அடுத்த இரு வாரங்களுக்குள் நாட்டுக்கு கிடைக்கும். (ச-ரி)

## கலைப்பீட ஒன்றிய தலைவராக நெவில்குமார்

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவராக யோ. நெவில்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்குப் புதிய தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தேர்தல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அதற்கமைய 206 வாக்குகளைப் பெற்ற யோ.நெவில்குமார் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அனைத்துப் பீடங்களின் ஒன்றியங்கள் தெரிவான பின்னர் பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி2,27)

நல்லைக்கந்தனுக்கு
இன்று (24.08.2023) வியாழக்கிழமை
நான்காம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
YARL SMART (Pvt) Ltd
076 666 5267 / 021 430 0044
No.341, K.K.S. Road, Jaffna.



### நல்லூரான் சிறப்பம்சம்

**நல்லைப் பதி வாழ் வடிவேலவனே**

பன்னிரு கை வேலவனே வா...வா...வா...
பாரிலுள்ளோர் குறை தீர்த்திடவே வா...வா...வா...
பிள்ளைத் தமிழ் கனியமுதே வா...வா...வா...
பீடு நடை போட்டுடனே வா...வா...வா...
புவனமதைக் காத்திடவே வா...வா...வா...
பூலோகம் செழித்திடவே வா...வா...வா...
பெருமானார் திருமகனே வா...வா...வா...
பேரருளைத் தந்திடவே வா...வா...வா...
பைங்கிளியாள் பாலகனே வா...வா...வா...
பொற்றாமரை வாவியில் வந்துதித்தவனே வா...வா...வா...
போற்றியுளப் பணிகின்றோம் வா...வா...வா...
பௌத்திரமாய் இன்னல்களை தீர்த்திடவே வா...வா...வா...
நல்லைப் பதியுறை வாழ் வண்ண வடி வேலவனே

சி.மகாலட்சுமி,
கொக்குவில்

## கடற்கொள்ளையர்களின் தாக்குதல்;
# இரு நாட்டு மீனவர்களையும் மோதவிடுவதற்கான சதியே!

யாழ்ப்பாணம், ஓக. 24

**காங்கேசன்துறை கடல் எல்லையில் வைத்து இந்திய மீனவர்கள் மீது கடற்கொள்ளையர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் மிலேச்சத்தனமானது. இருநாட்டு மீனவர்களையும் தூண்டிவிடும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதா? என ஐயம் எழுந்துள்ளது. வடமாகாண மீனவர்கள் சார்பில் வன்மையாக இதனைக் கண்டிக்கின்றோம்.**

- இவ்வாறு அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி மீனவர்கள் இந்திய ரோலர் மீன்பிடிப் படகுகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் இரு நாட்டு மீனவர்களுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சின் பின்னர் இந்திய மீனவர்களின் வருகை சற்றுக் குறைந்துள்ளது.

இந்தநிலையில் இருநாட்டு மீனவர்களையும்தூண்டிவிடும் வகையில் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதா என சந்தேகம் எழுந்துள்ளது - என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் கடற்றொழிலாளர் சமாசங்களின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவிக்கையில்;

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இந்திய கடற்றொழிலாளர்கள் விடயத்தில் வன்முறையை விரும்பியதில்லை. அறவழியிலும், ஜனநாயக வழியிலும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். இதற்கும் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டமை கவலையளிக்கின்ற விடயம் - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு நீதிவான் ஒரு மனநோயாளியாம்!

## நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதித்துறைமீது கரிபூசுகின்றார் வீரசேகர

**கொழும்பு, ஓக. 24**

**குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு முல்லைத்தீவு நீதிவான் அனுமதி அளித்ததன் மூலம், தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை அவர் மீறியுள்ளார். முல்லைத்தீவு நீதிவான் மனநோய்க்கு சிகிச்சைபெறும் ஒருவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்பொருள் என்பது மரபுரிமையாகும். அது தேசிய அடையாளமாகும். அதனை மாற்ற முயற்சிப்பது ஒரு தேசத்துரோகச் செயலாகக் கருதப்படும். முல்லைதீவு நீதிவான் குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி வழங்கினார். இது வெள்ளவத்தை சிவன் கோவிலில் பிரித் பாராயணம் நடத்துவதற்கு கல்கிஸை நீதிவான் அனுமதி வழங்குவதற்கு ஒப்பானதாகும். குறித்த நீதிவான், மனநோய்க்காக சிகிச்சை பெறும் ஒருவராவார். அத்தகைய ஒருவர் எப்படி நீதிவானாகச் செயற்பட முடியும்? எனவே, அவரை உடனடியாக நீக்கி, தகுதியுள்ள ஒரு தமிழ் நீதிவானை அந்த இடத்துக்கு நியமிக்க வேண்டும். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 31 (அ) பிரிவின் பிரகாரம், ஓர் இடம் பௌத்த மத சிதைவுகளைக் கொண்டிருப்பின், அந்த இடத்தில் பௌத்தர்களை ஆத்திரமூட்டும் வகையிலான செயல்களைச் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறானதொரு சட்டம் இருக்கையில் முல்லைதீவு நீதிவான் தமது உத்தரவின் மூலம் குறித்த சட்டத்தை வெளிப்படையாகவே மீறியுள்ளார். எனவே, தொலைநோக்கின்றி வழங்கப்படும் உத்தரவுகள் வீணான இனக்கலவரங்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்- என்றார். (ம)




## பயங்கரவாத மனநிலைக்கு தண்டனைகள் வேண்டும்!

### வஜிர கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

சிங்கப்பூரைப் போன்று பயங்கரவாத மனநிலையில் இருக்கும் ஒருவரைத் தண்டிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கையில் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத மனநிலையுடன் காணப்படுபவர்களைத் தண்டிப்பதற்கு ஒரு சட்டம் தேவை. பல நாடுகளில் பயங்கரவாத மனநிலையுடன் காணப்படுபவர்களைக் கைதுசெய்வதற்கு சட்டத்தில் இடம் உள்ளது. இலங்கையிலும் இதுபோன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இப்படியான சட்டம் இருந்திருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுத்திருக்க முடியும் - என்றார். (ம)

## கௌரவிப்பும் நிர்வாகத்தெரிவும்

அகில இலங்கை திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது. நிகழ்வில் 25 மற்றும் 15 வருடங்கள் சேவையாற்றிய மற்றும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிர்வாகத் தெரிவின் போது யாழ்.மாவட்ட இணைப்பாளராக திருமதி சி.தவமலர் தெரிவு செய்யப்பட்டார். (ய-159)

## கைப்பணிக் கண்காட்சிப்போட்டி விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஓக. 24

கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் கண்காட்சிப் போட்டி இந்த வருடமும் நடத்தப்படவுள்ளது. மாகாண மட்டப் போட்டிகள் இந்தாண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

போட்டியில் பங்கேற்க விரும்பும் கைப்பணியாளர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

போட்டிக்கான ஆக்கங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் வாரமளவில் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

கைப்பணியாளர்களை தேசியரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சிப் போட்டி ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-ரி2)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். முக்கிய முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவை தவிர்க்கவும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக் கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்கவும். குடும்பம் தொடர் பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## என்ன செய்யப்போகிறோம்?

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் வில்வித்தைப் பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்த துரோணர் ஒருநாள் மர உச்சியொன்றில் கிளி போன்ற உருவத்தைச் செய்து வைத்துவிட்டு, அதன் கழுத்தில் அம்பை எய்யுமாறு மாணாக்கரிடம் கூறினார். ஆனால் எவராலுமே அதன் கழுத்துக்கு அம்பை எய்து தாக்கமுடியவில்லை. காரணம், அவர்கள் இலக்குப் பார்க்கும் போது மரம், வானம், கிளை, இலை என எல்லாவற்றின் மீதும் கவனத்தைப் பரவலாக்கியிருந்தனர். இறுதியாக வந்த அருச்சுனன் மாத்திரம் வேறெதையும் பார்க்காமல், தனியே கிளியின் கழுத்தில் மட்டுமே தன் கவனம் முழுதையும் குவியச் செய்து அம்பை விட்டான். கிளிப்பொம்மையின் கழுத்தை அவன் அம்பு துண்டாடியது. ஒரு காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க புலன் முழுதையும் ஒருமுகப்படுத்த வேண்டுமென்பதைச் சொல்கிறது இந்தக்கதை. அதே போன்று ஒரு செயலைச் செய்யவிடாமல், குழப்ப வேண்டுமானால் வெவ்வேறு கவனக்கலைப்பான்களை உருவாக்க வேண்டுமென்பதையும் மறுவளமாக இதேகதை உணர்த்துகின்றது. இந்தவகையான கவனக்கலைப்பான்கள் மூலம் தமிழர்களின் உரிமைக்குரலையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நமத்துப்போகச் செய்யும் யுக்தியை இப்போது கையில் எடுத்துள்ளது சிங்கள – பௌத்த பேரினவாதம்.

வெவ்வேறு முனைகளில், வெவ்வேறு வகைகளில் தமிழ் மக்களின் சிந்தனையை திருப்பும் வகையிலான வேலைத்திட்டங்கள் நாடெங்கும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. திருகோணமலை விகாரை அமைப்பு, வெடுக்குநாறிமலை , குருந்தூர்மலை, பறாளாய் முருகன், உருத்திரபுரம் சிவன் கோயில் என்று தொல்லியலின் பேரால் திட்டமிடப்பட்ட சமயமுரண்கள் உருவாக்கப்பட்டு, அந்த இடங்கள் எப்போதுமே கொதித்துக் கொண்டிருக்கும் வகையில் பேணப்பட்டும் வருகின்றன. அதே போன்று முல்லைத்தீவின் தண்ணிமுறிப்பு, நாயாறு போன்ற தமிழ் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பிரதேசத்துக்குள் சிங்கள மீனவர்களையும் களமிறக்கி, அவர்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் கைங்கரியமும் நடந்தேறத்தொடங்கியுள்ளது. தமிழ் மக்களின் காணிகளை வனவளத் திணைக்களத்தினூடாக கையகப்படுத்தி, இன்னொரு பிரச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. போதாக்குறைக்கு இப்போது மட்டக்களப்பு மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையிலும், சிங்களவர்களையும், தேரர்களையும் இறக்கி அங்கும் ஓர் இனமுறுகலுக்கான விதை போடப்பட்டு வருகின்றது. இதைவிட நாளொரு இனவாதமும் பொழுதொரு வெறுப்புப்பேச்சுமாக சிங்களப் பேரினவாதிகள் ஆளுக்கொரு நச்சுக்கருத்துகளை துப்பத் தொடங்கியுள்ளனர். இவற்றுக்கெதிராக ஒரேசமயத்தில் எதிர்வினையாற்றவேண்டிய கட்டாயம் தமிழ்த் தரப்புக்கு. அதனால் எந்தப் பிரச்சினையிலும் முழுமையாகத் தனது கவனத்தைக் குவிக்கமுடியாமல், அந்த நெருக்கடியை வெல்லமுடியாமல் தமிழ் மக்கள் திணறிவருகின்றனர்.

இந்தக் கவனக்கலைப்பான்களுக்கு மத்தியிலும் தாக்குப்பிடித்து, ஏதேனும் ஒரு விடயத்தை மையப்படுத்தி தமிழினம் உணர்வுரீதியாக ஒன்றுபட முனையும் போது, அதைக் குழப்பவென புதிதாக இன்னொரு முனையில் இனவாத, மதவாத நெருப்பு மூட்டப்பட்டு விடும். பழைய பிரச்சினையை அப்படியே போட்டுவிட்டு, இந்தப் புதிய பிரச்சினையின் பக்கம் திரும்பிவிடுவோம். இப்படி எல்லாத் திக்குகளிலும் எம் உணர்வுகள், போராட்டங்கள், செயற்பாடுகள் , மனிதவலு எல்லாவற்றையும் வீணடிக்கச் செய்து, மனதளவில் களைத்து ஓய்ந்துபோய், இறுதியில் தீர்வாக எதைத் தந்தாலும் வாங்கிக் கொள்ளும் மனோநிலையை எம்மிடம் தொற்றச் செய்யவே பேரினவாதம் இப்படி சூழ்ச்சிவலை பின்னுகின்றது. இந்த வலையில் இருந்து எம்மை மீட்க எவரும் வரப்போவதில்லை. அதேவேளை இந்தப் பிரச்சினைகளுக்கு எதிர்வினையாற்றாமலும் விடமுடியாது. பேசாமலே இருந்தால் அவர்கள் தாம் நினைத்தபடி எல்லாவற்றையும் கபளீகரம் செய்துவிடுவார்கள். எனவே இந்தச் சமயத்தில், தமிழ்மக்கள் மத, வர்க்க, கட்சி பேதங்களை விடுத்து பொது எதிரியை வெல்வதற்காக ஓரணியாக எழுச்சி பெறவேண்டும். இல்லாவிடில் எல்லாமே குடிமுழுகிப் போய்விடும்.

### நாளொரு நல்வார்த்தை

"மகிழ்ச்சி உன் எண்ணத்தில் இருக்கிறது, உன் வார்த்தையில் இருக்கிறது. நீ செய்யும் நல்லிணக்கத்தில் இருக்கிறது"

- மகாத்மா காந்தி




# விவசாய வேலைத்திட்டங்களில் முழுமையான வெற்றியில்லை!

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 24**

**விவசாய வேலைத்திட்டங்கள் முழுமையாக வெற்றியளிக்கவில்லை. ஆதலால், பொதுமக்களின் உணவுத் தேவைக்காக உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

"விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தினூடாக பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறும் சலுகைகள் போதியளவில் இல்லை. இந்த நிலையில் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. இதனால் உணவுப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது "- என்றார். (ம)

# வேலைவாய்ப்பின்றி கலைப்பட்டதாரிகள்!

## பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

கலைப்பிரிவில் பட்டம் பெற்றவர்களில் 70 வீதமானவர்களுக்கு இன்னமும் வேலைவழங்கப்படவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

70 வீதமான கலைப்பட்டதாரிகள் அரசவேலையில் இன்னமும் உள்ளீர்க்கப்படவில்லை. இதனால் முழுப் பல்கலைக்கழக அமைப்பும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

அதேவேளை, அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளிநாடு செல்லும் தரப்பினரிடம் இருந்து பட்டப்படிப்புக்காக அரசு செலவிடும் தொகையை மீளப்பெறுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (ச-ரி3)

# பொலிஸாரின் பேச்சைக்கேட்டு நீதிபதிகள் தீர்ப்பளிக்கக்கூடாது!

## உயர்நீதிமன்றம் அறிவுறுத்து

வெறுமனே பொலிஸாரின் பேச்சைக்கேட்டு நீதிபதிகள் உத்தரவுகளை பிறப்பிக்கக்கூடாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்தில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்தார். பொலிஸார் இராணுவ வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்ததுடன், சாரதியின் இருக்கைக்கு அருகிலுள்ள முன்னிருக்கையில் அமர்ந்து பயணித்த இராணுவ மேஜரையும் கைது செய்தனர். இராணுவ மேஜரை நீதிமன்றம் விளக்கமறியலிலும் வைத்தது. தன்னைக் கைதுசெய்ததும், விளக்கமறியலில் வைத்ததும் தவறு என்று இராணுவமேஜர் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இராணுவ மேஜர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணிசாலிய பீரிஸ், விபத்துக்குசாரதியே பொறுப்பு எனவும் வாகனத்தில் பயணம் செய்தவரை கைது செய்தது தவறு எனவும் மன்றில் எடுத்துரைத்தார்.

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் "சாரதியின் தவறுக்காக வாகனத்தில் பயணித்தவர்களைக் கைதுசெய்தது தவறு. பொலிஸார் சொல்கின்றார்கள் என்பதற்காக நீதிபதிகள் அதன்படி செயற்படக்கூடாது" என்று தெரிவித்ததுடன், இராணுவ மேஜரைக் கைதுசெய்த பொலிஸ் அதிகாரி இழப்பீடாக ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது. (ம-6)

## நாளை

25.08.2023
வெள்ளிக்கிழமை
ஆவணி 08

சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05

வரலக்ஷ்மி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளாட்சித் தேர்தல்: பெரமுன கரிசனை

கொழும்பு, ஓக. 24

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போட்டுள்ளதால் வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். ஒன்று தேர்தலை நடத்த வேண்டும் அல்லது அவர்களுக்கு விதித்த மட்டுப்பாடுகள்- கட்டுப்பாடுகளை இரத்துச் செய்யவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஊடகசந்திப்பில் பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த வாரம் பேச்சில் ஈடுபட்டபோது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி நிச்சயிக்கப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதால் வேட்புமனுத்தாக்கல் செய்தவர்கள் பல்வேறு வழிமுறைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டினோம்.

சுமார் நான்கு மாதகாலமாக சம்பளமில்லாத விடுமுறையில் இருந்த வேட்புமனு தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளத்துடன் அரச சேவையில் தற்போது இணைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நிதி விடுவிப்பதில் சிக்கல் நிலை காணப்படுமாயின் வேட்பாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாட்டு சுற்றறிக்கைகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இரத்துச் செய்யவேண்டும்.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீளமைக்கும் வகையில் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட சமர்ப்பித்த தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை பெற்றுக்கொள்வதுடன், மக்கள் வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும் என உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு தெரியப்படுத்தியுள்ளது - என்றார். (ச-இ)

## மோசடி செய்திருந்தால் சிறையில் அடையுங்கள்

### அநுரகுமார சவால்



**கொழும்பு, ஓக. 24**

**ஜே.வி.பிக்கு வெளிநாட்டில் பணம் உள்ளது என்று சிலர் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். நான் ஒரு சதத்தையாவது மோசடி செய்திருந்தால் என்னைச் சிறையில் அடையுங்கள்.**

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் எனது கட்சியைச் சேர்ந்த எவரும் பொதுமக்களின்பணத்தில்ஒரு சதத்தைக்கூட மோசடிசெய்யவில்லை. நாங்கள் அவ்வாறு மோசடியில் ஈடுபட்டிருந்தால் எங்களால் இந்த அரசியலைச் செய்ய முடியாது.

அவர்கள் ஆட்சியிலிருந்தவேளை நாங்கள் மோசடியில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிட்டோம். நாங்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் தற்போதைக்கு நாங்கள் சிறைகளில் இருந்திருக்கவேண்டும். எங்களைத் தண்டிப்பதற்காக கோத்தாபய ராஜபக்ச ஆணைக்குழுவொன்றை நியமித்தார்.

ஆணைக்குழு தனது விசாரணைகளை முடிக்கும் முன்னரே கோத்தாபய வீட்டிற்குச் செல்லவேண்டிய நிலையேற்பட்டது. நாட்டின் தலைவிதியை ஜே.வி.பி. மாற்றுவதை எவராலும் தடுக்க முடியாது -என்றார். (ஏ-இ)

## கல்விச் சுற்றுலா: மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.24

கல்விச் சுற்றுலாவுக்காகச் சென்ற மாணவன் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார். பஸ் ஜன்னல் ஊடாகத் தலையை வெளியே வைத்திருந்தபோது, மின்கம்பத்துடன் தலை மோதி விபத்து நடந்துள்ளது.

ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ருமஸ்ஸல மலையை நோக்கிச் செல்லும் குறுக்கு வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயது மாணவன் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் படுகாயமடைந்த மாணவன் கராப்பிட்டிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகஹ் ஹபரணைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-ரி2)

## வெளியேறும் பேராசிரியர்கள்; பல்கலைக் கட்டமைப்புக் குலைவு

கொழும்பு, ஓக. 24

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகக் கட்டமைப்புக்கு குறைவான பேராசிரியர்களே பணியாற்றுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 7 மாத காலப்பகுதியில் மாத்திரம் பல்கலைக்கழகங்களின் 600 பேராசிரியர்கள் வெளிநாடுகளுக்கு வெளியேறியுள்ளனர்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் , 12 ஆயிரம் பேராசிரியர்கள் இருக்க வேண்டும். தற்போது 6 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே கடமையில் உள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் அரச பல்கலைக்கழக முறைமையும் படிப்படியாக நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது என பல்கலை பேராசிரியர் சம்மேளனத் தலைவர் பரண ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-ரி3)

## சுங்க ஆவணங்களை பயன்படுத்தி மோசடி

கொழும்பு, ஓக.24

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நிறுவன அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி நிதி மோசடிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சுங்கத் திணைக்களம், இனந்தெரியாத நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை மாற்றுவதைத் தவிர்க்கவேண்டும் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் சுங்கப் பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஏ-ரி3)

## பங்களாதேஷ் கடனில் காற்பங்கு கையளிப்பு

### பதில் நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

பொருளாதார நெருக்கடிக்காக பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் 50 மில்லியன் அமெரிக்க டொலர் மீள செலுத்தப்பட்டுள்ளது என்று பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2021 ஆம் ஆண்டு பங்களாதேஷிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடனாகப் பெற்றது.

நாணயப் பரிமாற்றுவசதியின் கீழ் பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனில் முதல் தவணையாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணையாக 100 மில்லியன் அமெரிக்க டொலரையும் மூன்றாம் கட்டமாக 50 மில்லியன் அமெரிக்க டொலரையும் செலுத்தத் திட்டமிட்டுள்ளது - என்றார்.

இதேவேளை கடனை மீளச்செலுத்துவதற்கான கால அவகாசம் கடந்த வரும் செப்ரெம்பர் மாதம் நிறைவடைந்த நிலையில் இருவேறு சந்தர்ப்பங்களில் கடனை செலுத்துவதற்கான அவகாசம் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி2)

## நாட்டின் எதிர்காலத்துக்கு சிறந்த தலைமை ரணில்!

### வஜிர எம்.பி. புகழாரம்

கொழும்பு, ஓக. 24

பொதுமக்களின் பாதுகாப்புக்காக குறுகிய காலத்தில் பெருமளவான சட்டங்களைக் கொண்டு சட்டமாக்கி நடைமுறைப்படுத்திய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஒழுக்கமான சமூகமாக வாழும் உரிமை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

பொருத்தமானவர்கள் மற்றும் ... இணைந்து பணியாற்றும் இயலுமை ரணில் விக்கிரமசிங்கவிட முண்டு.

அரசியல் களத்தில் அதிகாரத்தைப் பெறுவதற்காக ஒருவரை ஒருவர் வசைபாடிக் கொண்டிருக்கும் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே சக்திவாய்ந்த ஊழல் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றி, அதை சட்டமாக்கி, நாட்டை சரியான பாதைக்கு வழிநடத்தி வருகிறார்.

அத்துடன் சர்வதேச தரத்தில் இலங்கை ஊடகங்களை மாற்றிய மைக்க ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம் உள்ளிட்டவை முன் வைக்கப்பட்டபோது ஒழுக்கத்தை மதிக்க விரும்பாத குழுக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனாலும் ஒட்டு மொத்த இலங்கை மக்களும் ஒழுக்கமான சமூகமாக வாழும் உரிமை அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-26)

## பீடி இலைகள் மீட்பு

சென்னை, ஓக.24

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த ஆயிரம் கிலோ பீடி இலைகள் தமிழகத்தின் தூத்துக் குடி மாவட்டத்தின் தாளமுத்துநகர் கடற்கரையில் மீட்கப்பட்டன.

பீடி இலைகள் இலங்கைக்குக் கடத்தப்படவுள்ளன என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய தமிழகப் பொலிஸார் கண்காணிப்புகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

தாளமுத்துநகர்ராஜபாளையம் கடற்கரைப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமாகப் பயணித்த சிறியரக லொறியை பொலிஸார் சோதனையிட்டபோது, பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த லொறியில் பயணித்தவர்கள் தப்பியோடியுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

81.ஆசாத் வீதி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **சனூன் ஜப்ராஸ்** ஆகிய நான் எனது பெயரை **சப்ராஸ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சப்ராஸ்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**சப்ராஸ்**

(cs 26058) (N 1)

## வேலையாள்கள் தேவை

**DSI Show Room**

ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

Srinimal

T.P.:071 415 0995

No.304 Kasthuriyar Road, Jaffna.

(cs 26058) (N.1)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



சோபகிருது வருடம் ஆடி மாதம் 30 ஆம் நாள் (15.08.2023) செவ்வாய்க்கிழமை எமது குடும்ப சிரேஷ்ட புத்திரன்

**பராத்வாஜ கோத்திரம்**
**சிவஸ்ரீ**

**ரமேஷ்சர்மா பிரகாஷ்சர்மா**

அவர்களது ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**24.08.2023 - வியாழக்கிழமை (தசாகம்)**
**25.08.2023 - வெள்ளிக்கிழமை (ஏகோதிஷ்டம், மாசியம்)**
**26.08.2023 - சனிக்கிழமை (சபிண்டீகரணம்)**
**27.08.2023 - ஞாயிற்றுக்கிழமை கிருஹயக்ஞம் நடைபெறும்.**

அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தபால்பெட்டி லேன்,
பரமேஸ்வராக் கல்லூரி 3ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

ரமேஷ் சர்மா குடும்பத்தினர்.
077 724 5178

## 100 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

**24.08.2023**



**ஆனந்தர் சுப்ரமணியம்**
**(ஆசிரியர்)**

அவர்கள் இன்று (24.08.2023) வியாழக்கிழமை தனது 100வது பிறந்தநாளை கனடாவில் வெகுவிமர்சையாகக் குடும்பத்தாருடன் கொண்டாடுகின்றார். அவருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
இணுவில். - மருமக்கள் -

# இலவசக் கணினிக் கற்கைநெறி

# YARL SMART (Pvt) Ltd

**NxtGen Smart Academy (Pvt) Ltd**

(Next Generation Smart Academy)

Yarl Smart (Pvt) Ltd நிறுவனத்தின் மாபெரும் அனுசரணையுடன் NxtGen Smart Academy இணைந்து நடாத்தும் இலவசக் கணினி கற்கைநெறியுடனான தொழிற்பயிற்சியும், வேலை வாய்ப்பும்.

மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு இலவசமாக கணினிக் கல்வியை பயிற்றுவிப்பதோடு தொழிற் பயிற்சியினையும் வழங்கி கணினி தொடர்பான வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க உள்ளோம். 120 மாணவர்களை உள்ளடக்கிய வகையில் 04 மாத கற்கைநெறியுடன் தொழிற்பயிற்சியும் நடைபெறவுள்ளது. இக்கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் 18-24 வயதிற்குட்பட்ட மாணவர்கள் 1 -Sep-2023 திகதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு
0760075222 / 0756101100
Call/WhatsApp

Join WhatsApp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டக்கல்லூரி கட்டண உயர்வு மீளாய்வு செய்தல் அவசியம்!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 24

சட்டக்கல்லூரி கட்டணங்களை அரசாங்கம் உயர்த்தியுள்ளதால் மாணவர்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதுபாரதூரமான விடயம். இதற்குச் சாதகமாக தீர்வு காண கட்டண உயர்வை மீளாய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கடந்த மே மாதம் வர்த்தமானி அறிவித்தலின்படி சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக் கட்டணங்கள் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த அதிகரிப்பானது 257 சதவீத அதிகரிப்பாகும். இது மாணவர்களை நெருக்கடிக்குள் தள்ளும் விடயமாகும். எந்த அடிப்படையில் இந்தக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கட்டணம் அதிகமாக இருந்தால் அது மாணவர்களுக்கு சாதகமான அதிகரிப்பாக இருக்க வேண்டும். எனவே, சட்டக்கல்லூரி நுழைவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், பதிவுக் கட்டணம் என்பவற்றின் அதிகரிப்பை இடைநிறுத்தி மீளாய்வு செய்து சாதகமான தீர்வு காணப்பட வேண்டும் - என்றார்.

(ச-இ)

## வாள்வெட்டு: ஒருவர் கைதானார்!

அதுருகிரிய, சீலாலங்கார மாவத்தை பகுதியில் நபர் ஒருவரின் கை மற்றும் கால்களை வாளால் தனித்தனியாக வெட்டி எடுத்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் வாழும் ஹபரகட கசுன் என்ற போதைப்பொருள் வியாபாரியின் நண்பரின் மனைவியுடன், தாக்குதலுக்குள்ளான நபர் தொடர்பு வைத்திருந்ததால், அதற்குப் பழிவாங்கும் விதமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

(ம)


கொழும்புத்துறை மேற்கு வதரி பீட ஸ்ரீ விநாயகப்பெருமான் ஆலயம்

**பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் - 2023**

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் (17.09.2023) **ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில்** நடைபெற இருப்பதால் **சகல மகாசபை உறுப்பினர்களையும்** தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கௌரவ செயலாளர்
ஆலய நிர்வாக சபை

(cs51785) (N.1)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னைநாள் ஆசிரியர்
திருமதி த. திருமகளின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியம் பத்திநாதன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், முன்னைநாள் சக ஆசிரியர்கள்.**
**யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை.**

(CS/31781)AH-1



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
08 . 12 . 1939



இறைவன் அடியில்
24 . 08 . 2021

அமரர்

**முருகேசு பாலசுப்பிரமணியம்**

(Bala Master)

(முன்னாள் CTB உத்தியோகத்தர் மற்றும் ஆங்கில ஆசிரியர் - கொழும்பு - 13)

மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும்
நினைவுகள் எம்மிலிருந்து ஒருபோதும்
மறைவதில்லை...
பாசமான நினைவுகளை எம்மிடம்
விட்டுச் சென்றீர்கள், தந்தையே!

உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில்
சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்....

சொந்த இடம்:
வட்டுதெற்கு,
வட்டுக்கோட்டை

தற்காலிக முகவரி:
புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
TP: 074 346 2641
Viber : 0033 758 226 047



## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 12 . 1948



மறைவு
23 . 08 . 2023

**திருமதி இராஜலட்சுமி செல்வநாயகம்**

(ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

காரைநகரை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி செல்வநாயகம் அவர்கள் நேற்று (23.08.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சுந்தரம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், திரு.செல்வநாயகம் (ஓய்வுபெற்ற விலைமதிப்பீட்டு உத்தியோகத்தர் - Charted Valuer) அவர்களின் அன்பு மனைவியும், அபிராமி, வைத்திய கலாநிதி ஜனகன் (Senior Registrar - Teaching Hospital, Mahamodara) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகுணன் (இ.போ.ச உத்தியோகத்தர் - ஹொரணை), ஹேமாலி (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, பாணந்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரகீஷ் லியோ, ஹெஷில் டவீன் ஆகியோரின் பேர்த்தியும், விஜயலட்சுமி, அமரர் கிருபைராஜா, ஆனந்தராஜா, பற்குணராஜா, ராஜசுலோஜனா, மதிவதனா, Dr.அனுஷியா, நளாயினி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மீனாம்பிகை, பாலசுப்பிரமணியம் மற்றும் புஷ்பராணி, சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 42, நந்தாவில் குறுக்கு வீதி, தாவடி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திரு.வை.செல்வநாயகம் - கணவர்
வைத்திய கலாநிதி ஜனகன் - மகன்
தொலைபேசி : 021 222 5639

(CS 25060) A-1



## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 06 . 1932



இறப்பு
21 . 08 . 2023

**திருமதி பத்மாவதி குமாரசாமி**

யாழ். கலட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி குமாரசாமி கடந்த (21.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி மதுரைநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் நடராசா, இராமலிங்கம் சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு அண்ணியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், நாகம்மா, வேதநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், நித்தியானந்தனின் அன்புத் தாயாரும், சிவசாரதாவின் அன்பு மாமியாரும், திருசாந்தி, யதுர்சன், Dr.லலித்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிரிராஜினி, ஹிரித்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (22.08.2023) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

101, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 51793) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சை முடிவு; செப்ரெம்பர் 10 க்கு முன்னர்

கொழும்பு, ஓக.24
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை இந்த மாதம் வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் முன்னர் தெரிவித்திருந்த நிலையில், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான திகதி கல்வி அமைச்சால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதிவரை பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## இடர்...

வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதுள்ள தரவுகளின்படி 22 ஆயிரம் குடும்பங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 8 ஆயிரம் குடும்பங்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் அதிகமாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசங்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டையும் அதிகமாக எதிர்கொண்டுள்ளன. இந்தப் பிரதேசங்களுக்கு இடர் முகாமைத்துவ நிலையம் ஊடாகக் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வறட்சி நிலைமை மாவட்டத்தில் நீடிக்குமானால் ஏற்படும் இடர்நிலைமையைச் சமாளிக்க துரிதமான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும். சம்பந்தப்பட்ட திணைக்களங்களை அழைத்து இடர் முகாமைத்துவம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்றை விரைவில் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் தொடர்பாகவும், வறட்சி காரணமாக அன்றாடத் தொழிலை இழந்தவர்கள் தொடர்பாகவும் தரவுகளைச் சேகரித்து, அவர்களுக்கு அரச நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நிவாரணம் வழங்க முயற்சிக்கின்றோம். அதற்கான கூட்டம் ஒன்றும் விரைவில் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளபோதும், விவசாயிகளிடம் இருந்து தனிப்பட்ட ரீதியான விண்ணப்பங்கள் எவையும் இதுவரை வரவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தரவுகள் பிரதேச செயலக ரீதியாக சேகரிக்கப்படவுள்ளன. மாவட்டத்தில் கிணற்றுநீர் மட்டம் வற்றிச் செல்கின்றது. மாவட்டத்தில் தற்போதுள்ள இடர் நிலைமையைக் கருத்திற்கொண்டு மக்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் - என்றார்.

(அ-எ-26,27)

## இனக்கலவரம்...

அமைப்புகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவருக்கும், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பிலேயே இந்த விடயம் பேசப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள், பயங்கரவாதத் தடைச் சட்ட நடைமுறையாக்கமும் எதிர்ப்புக்களும், தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் காணி அபகரிப்பு, மலையக மக்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான ஆதரவு போன்ற பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளன.

தமிழ் சிவில் சமூக அமையம், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, அடையாளம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

(அ-எ,7)

## அமெரிக்கத்...

யாழ்ப்பாணத்துக்கு வந்த அவர், பல்வேறு தரப்புகளுடனும் நேற்றுச் சந்திப்புக்களை நடத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து வடக்கு மாகாணத்தின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசினார். யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்றிருந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் அவர் மரம் ஒன்றையும் நட்டார்.

(அ-எ-26,27,125)

## மனிதப்...

தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பாகவும் அவதானிக்கின்றோம். இலங்கை அரசாங்கம் நினைத்தவாறு செயற்பட முடியாது - இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் பத்திரிகை ஆசிரியர்களையும், சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும் தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசினார்.

அண்மையில் கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் என்று தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதை வலியுறுத்திப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே ஜூலி சங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை அமெரிக்கா சாதாரண விடயமாகக் கருதாது. ஒவ்வொரு புதைகுழியும் படுகொலைகளின் சாட்சியங்களே. அவை முக்கியமான தடயங்கள்.

இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் செயற்படவேண்டும். இது ஒரு உள்நாட்டு விடயம் என்பதால் எம்மால் நேரடியாகத் தலையிட முடியாது. அதற்காக இலங்கை அரசாங்கம் நினைத்தவாறு செயற்பட முடியும் என்று அர்த்தமல்ல. சர்வதேசம் இந்த விடயத்தை மிக அக்கறையுடன் அவதானித்து வருகின்றது. சர்வதேச சட்டங்கள் இந்த விடயத்தில் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் சர்வதேசம் அக்கறை கொண்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலக்சுமி விரத பூசை வழிபாடு

யாழ், ஓக. 24
கோப்பாய் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வரலக்சுமி விரத சிறப்புப் பூசை வழிபாடுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-17)

★ ★ ★

யாழ், ஓக. 24
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை வரலக்சுமி விரத சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (சு)

# கரையொதுங்கும் இறந்த ஆமைகள்

## பரிசோதனைக்கு பணிப்பு


கொழும்பு, ஓக. 24
மேல் மாகாண கடற்கரைகளில் நேற்றுமுன்தினம் சுமார் 7 ஆமைகள் வரை உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.
காலிமுகத்துவார கடற்கரையில் 5 ஆமைகளும் வெள்ளவத்தை மற்றும் தெஹிவளை கடற்கரைகளில் மற்ற இரண்டு ஆமைகளின் சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
அதன்படி ஒருவாரத்துக்குள் இதுவரை 12 ஆமைகள் இறந்து கரையொதுங்கின என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஆமைகளின் இறப்புக்கான காரணத்தை பரிசோதனைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



இணுவில் பொதுநூலக கனடா அமைப்புக்குழு, விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக இணுவில் மத்திய கல்லூரியின் துடுப்பாட்ட அணி, கைப்பந்து அணி ஆகியவற்றுக்கான 'ஜெர்சி'களைத் தயாரிப்பதற்காக ஒருதொகுதி நிதியை அண்மையில் வழங்கியது. (ம)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ
25 . 11 . 1945



கண் நெகிழ
24 . 08 . 2021

### அமரர் வல்லிபுரம் கந்தசாமி

**திதி - அபரபக்க துதியை (01.09.2023)**

ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறிடுமோ எம் மனது
ஆறாத துயரோடு வாழ்கின்றோம் தெய்வமே
எதிர்பாராத நோய் வந்து, சுகம் இழந்து
மனதளவில் எம் உறவை விட்டு
மண்ணுலகம் வெறுத்தீரோ
கண்ணில் நீரை ஈந்தே கனவாய் ஆனீரோ
நேற்று போல் எல்லாம் எம் நெஞ்சோடு நினைவிருக்க
பாதி வழியில் நாம் பரிதவித்திட பறந்து போனதேனோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர்.
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காய் இறைவனை வணங்குகிறோம்.

**வெள்ளாம்போக்கட்டி,**
**கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

(CS 26064) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி மாணிக்கம் தெய்வேந்திர ஐயர்

செல்வச்சந்நிதி தொண்டமானாற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் தெய்வேந்திர ஐயர் அவர்கள் நேற்று (23.08.2023) புதன்கிழமை முருகனடி சேர்ந்தார்.
அன்னார் திரு. விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் (பிரதம குரு செல்வச் சந்நிதி ஆலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகசாமி ஐயர் - வேதநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் விசாகரத்தின ஐயர் நேசம்மா அவர்களின் அன்பு மருமகளும் மகேந்திராணி, ஜெயந்திரன், சசிந்திரன், ரவீந்திரன், அமரர் துஷியேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சிறிரஞ்சன், சசிகலா, ஜெயந்தாதேவி, சுசிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆ. சிவசண்முக ஐயரின் (பிரதம குரு செல்வச் சந்நிதி ஆலயம்) அவர்களின் அன்புச்சகோதரியும் அமரர் வி.நாகேந்திரன், அமரர் கு. தேவாம்பிகை, வி.இராசேந்திரன், பா.விமலாம்பிகை, வி.விஜேந்திரன், வி.யோகேந்திரன், அமரர் வி.லோகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கபிலன், லோகஜன், கனேந்திரன், ஹரேந்திரன், யுகேந்திரன், வைஸ்ணவி, மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஷ்னேந்திரன், சிவனேந்திரன் ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2023) வியாழக்கிழமை முறபகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகி 12.00 மணியளவில் காட்டுப்புலம் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**தெய்வேந்திர ஐயர் - 021 226 5728**
**சசீந்திர ஐயர் - 077 2440 642**

CS 26063 M - 1

## மரண அறிவித்தல்



### திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி

வாகையடி, மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி நேற்று (23.08.2023) புதன்கிழமை உசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை நாகமுத்து தம்பதியினரின் மூத்த மருமகளும் கார்த்திகேசு (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளீதரன் (லண்டன்), யசீதரன் (லண்டன்), நயாளதரன் (லண்டன்), அகல்யா (ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), அனுஷா (ஆசிரியர்,யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (லண்டன்), கந்தவேள் (இலங்கை திறந்த பல்கலைகழகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசரத்தினம் (நவாலி), அமரர் பத்மநாதன், அமரர் தனபாக்கியவதி (தனம் ரீச்சர், மட்டுவில்), அமரர் பத்மாவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கௌசிகன், அஜந்தன், அபினாஸ், கோசிகா, மிபிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**சிற்றம்பலம் வீதி,**
**உசன், மிருசுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 6314 178**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலை...

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் பத்திரிகை ஆசிரியர்களையும், சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும் தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசினார். அவரிடம் வினவப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருந்தூர்மலை விவகாரத்தை மிக உன்னிப்பாக அமெரிக்கா அவதானித்து வருகின்றது. இந்த விடயத்தில் மூன்று விதமான பிரச்சினைகளை நாம் அவதானிக்கின்றோம்.

காணிப் பிரச்சினை, சட்டப்பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்ற மூன்று விடயங்கள் குருந்தூர்மலை விவகாரத்தில் உள்ளடங்கியுள்ளன. இது ஒரு சிக்கலான விடயம் என்பதால் கவனமாகக் கையாளப்பட வேண்டியது அவசியம். இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாள்கின்றது என்பதையும் நாம் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்தச் சிக்கலுக்கு இலங்கை அரசாங்கம் விரைவில் அமைதியாகத் தீர்வைக் காண முயலவேண்டும். இல்லாவிட்டால் இது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும் என்பதை உணர முடிகின்றது. இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வை எட்டுவதற்கான அழுத்தங்களை அமெரிக்கா வழங்கும் என்றும் ஜூலி சங் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வருவதில்காட்டப்படும்அக்கறை,இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் வழங்கும் வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் காட்டப்படுவதில்லை. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இருக்கின்றனவா? என்று ஜூலி சங்கிடம் கேட்டபோது; வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் புறக்கணித்து வருகின்றது என்பதை ஏற்றுக்கொண்ட அவர், ஆனால் ஒப்பீட்டளவில் முன்னேற்றம் இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உருவாக்கம், உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு உருவாக்கம் என இலங்கை அரசாங்கம் சில நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றது. அவை ஆக்கபூர்வமானவையா என்பது எதிர்காலத்தில்தான் தெரியும். எனினும் சிறிது முன்னேற்றம் இருக்கின்றது. ஏனையவை தொடர்பாக படிப்படியாக அழுத்தம் கொடுக்கப்படும் என்று ஜூலி சாங் தெரிவித்தார். (அ-எ)

## வடக்கின்...

கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் வடக்கு ஆளுநர் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

வடக்கு மாகாணத்தின் மீள்குடியமர்வு, விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலா போன்றவற்றிலும் பொதுவான உட்கட்டமைப்பு விடயங்களிலும் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது என்று வடக்கு ஆளுநர் குறிப்பிட்டார்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பொதுமக்களின் நலனுக்காகக் கடந்த சில ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் வடக்கு ஆளுநர் விளக்கமளித்தார்.

இலங்கையின் அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகளில் திருப்தியடையக்கூடிய நிலைமை உள்ளது என்று அமெரிக்கத் தூதுவர், இந்தச்சந்திப்பில் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக அமெரிக்கா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இரண்டாவது தடவையாகப் பதவியேற்றுள்ள பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு தனது வாழ்த்துக்களையும் அவர் பகிர்ந்து கொண்டார். (அ-எ-26,27,20)

## சண்டிலிப்பாயில்...

யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்னவின் வழிகாட்டலில், யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினர் நேற்றுச் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

மானிப்பாயைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வன்முறைச் சம்பவங்களில் பயன்படுத்தினர் என்று கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும், இரு வாள்களும், ஒரு இரும்புக் கம்பியும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே நடந்த வன்முறைச் சம்பவம் ஒன்று தொடர்பில் பழிவாங்கும் நோக்குடனேயே இவர்கள், சண்டிலிப்பாயில் உள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர் என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதேநேரம் வன்முறைச் சம்பவங்களில் தொடர்புடைய 6 பேர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ-எ-26)

## சந்திரனில்...

அறிவித்தது. இதன்மூலம் சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

நேற்று மாலை 6.04 மணிக்கு நிலவின் தரைப்பகுதியில் விக்ரம் லேண்டர் தடம் பதித்தது. விக்ரம் லேண்டர் தரையிறங்கும் நிகழ்வை தென்னாபிரிக்காவில் இருந்து காணொலி வாயிலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரோ குழுவினருடன் இணைந்து பார்த்தார்.

விக்ரம் லேண்டர் தரையிறங்கியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதமர் மோடி "இது போன்ற வரலாற்றுத் தருணங்களைப் பார்க்கும்போது நமக்குப் பெருமையாக இருக்கிறது. இது புதிய இந்தியாவின் விடியல். இந்தத் தருணம் மறக்க முடியாதது. இந்தத் தருணம் இதற்குமுன் நடந்திராதது. துயரக் கடலை கடக்கும் தருணம் இது. நமது விஞ்ஞானிகளின் கடின உழைப்பாலும் திறமையாலும், உலகில் எந்த நாடும் அடைய முடியாத நிலவின் தென் துருவத்தை அடைந்துள்ளோம் - என்றார்.

சந்திரயான்-3 திட்டத்தின் திட்ட இயக்குநராக தமிழ்நாட்டின் வீர முத்துவேல் செயற்பட்டு வருகிறார். விக்ரம் லேண்டர் வெற்றிகரமாகத் தரையிறங்கியதும் அவர் "எனது குழுவினர் முழுமையான பங்களிப்பை வழங்கினர்" என்று கூறினார்.

சந்திரனின் தென் துருவப்பகுதியில் 70 டிகிரி அட்சரேகையில் லேண்டர் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

நிலாவில் வெப்பம் அதிகமாக இருக்கும் மண் பகுதியில் நடக்கும் மாற்றங்களை அறிவது, நிலாவில் உள்ள பொருள்கள் என்ன நிலையில் உள்ளன, அங்குள்ள பொருள்கள் வெப்பத்தைத் தாங்கும் தன்மை கொண்டவையா? அல்லது அந்த வெப்பத்தில் உடையக்கூடிய பொருள்களா? என்பது போன்ற தகவல்களைக் கண்டறிவது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை, சந்திரனின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம் சில தினங்களுக்கு முன்னர் சந்திரனில் மோதி நொருங்கியிருந்தது. (அ-எ-இ)

## சபையில்...

நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரே சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சபையில் ஏற்பட்ட அமளியை அடுத்து பிரதி சபாநாயகர் நாடாளுமன்ற நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்க நேர்ந்தது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக நேற்று விவாதம் நடத்தப்படவிருந்தது.

வாய்மூல கேள்வி, பதில் நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவின் கேள்வி ஒன்றுக்கு ஆளும் தரப்பில் இருந்து பதில் கிடைக்கவில்லை. அதனால் அவர் தொடர்ச்சியாகத் தனது கேள்வியை முன்வைத்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் சபையில் இல்லை என்றும், அதனால் நேரத்தை விரயம் செய்யவேண்டாம் என்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். ஆயினும் நளின் பண்டார அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

ஒரு கட்டத்தில் நளின் பண்டாரவின் ஒலிவாங்கி இணைப்புத் துண்டிக்கப்பட்டதை அடுத்து, சபையில் அமளி ஏற்பட்டது. அதையடுத்து பிரதி சபாநாயகர் சபையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். (அ-எ-இ)

## பிக்குகளின்...

முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச நாடுகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்கவேண்டும். சர்வதேச நீதிப் பொறிமுறைக்குள் இலங்கையை உட்படுத்தவேண்டும். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதைத் தடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

நேற்றுமுன்தினம் மயிலத்தனைமடுப் பகுதியில் உள்ள பண்ணையாளர்களின் அழைப்பின்பேரில் அங்கு சென்ற சர்வமதத் தலைவர்கள், சமூக மட்டப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம் பௌத்த் தேரர்களால் தடுத்து வைக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

மயிலத்தனைமடுவில் மேய்ச்சல் தரவையாக ஒதுக்கப்பட்ட காணிகளில் சட்டவிரோதமாக பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதனால் அங்குள்ள பண்ணையாளர்கள் தொடர்ச்சியாகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவை தொடர்பாகக் கலந்துரையாடவே சர்வமத் தலைவர்களையும், சமூக மட்டப் பிரதிநிதிகளையும், ஊடகவியலாளர்களையும் பண்ணையாளர்கள் அழைத்திருந்தனர். (அ-எ-26)

## சிறப்புரிமைத்...

செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நீதிபதி, நீதி நிர்வாக விடயத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தனிப்பட்ட செயற்பாடாக விமர்சிக்க முடியாது. ஒரு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அவ்வாறான விடயத்தை விமர்சித்து விவாதிக்கமுடியும்.

நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிவானின் பெயரைக் குறிப்பிட்டு அவர் மனநோயாளி எனவும், அவரது மனைவி தொடர்பாகவும் பிரஸ்தாபித்துமிகமோசமானசிறப்புரிமை துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இரண்டாவது தடவையாக சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 83ஆம் பிரிவை மீறும் செயல் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை விதிகளை மீறும் செயல் மட்டுமல்ல, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் மிக மோசமான மனித ஒழுக்க மீறலுமாகும். நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உரை ஹன்சாட் பதிவில் இருந்து நீக்கப்படவேண்டும். இந்தச் சபையின் சிறப்புரிமையை மீறியமைக்காக அவர் மீது சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார். (அ-எ-26)

## முல்லைத்தீவுடன்...

முல்லைத்தீவு மாவட்டப் பெரும்போகச் செய்கை தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.பரணீதரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் 22 ஆயிரத்து 75 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளமுடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 21 ஆயிரத்து 800 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்யப்பட்டது.

இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கான தரவுகள் அந்தந்தக் கமநல சேவை நிலையங்கள் ஊடாகத் தற்போது பெறப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழிருந்த சம்பத்நுவர கமநல சேவை நிலையம் தற்போது முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்குரிய தரவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெறப்படவேண்டியுள்ளது. அனைத்துத் தகவல்களையும் பெற்றுக்கொண்டபின்னரே முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்போகச் செய்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கமுடியும் - என்றார். (அ-எ-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்ணை சுற்றுவட்ட அம்மன் சிலைக்கு

# கொட்டகை அமைக்க முயற்சி நேற்றிரவு நகரில் பதற்றம்

யாழ்ப்பாணம், பண்ணைச் சுற்றுவட்டத்தில் உள்ள நாக பூசணி அம்மன் சிலைக்கு இரவோடு இரவாக கொட்டகை அமைக்கும் முயற்சிகள் சிலரால் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து அங்கு நேற்று இரவு பதற்றம் ஏற்பட்டது.

நேற்று இரவு சிலர் அங்கு கொட்டகை அமைக்கும் ஆயத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். ரோந்துப் பணியில் இருந்த பொலிஸார் இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

சிலை நிறுவப்பட்ட விடயம் ஏற்கனவே நீதி மன்றத்தின் நடவடிக்கைக்கு உட்பட்டுள்ள நிலையில், உரிய அனுமதி பெறாது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம் என்று பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

அனுமதி பெறாது நடவடிக்கைகளை முன்னெடுத்து தேவையற்ற பதற்றத்தை உருவாக்க வேண்டாம் என்றும், உரிய இடங்களில் அனுமதி பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-26)

### தேசிய கீதம் இசைத்தல் விரைவில் வழிகாட்டல்

தேசிய கீதத்தைப் பாடுவது தொடர்பான புதிய வழிகாட்டல் நெறி முறைகளை அறிமுகப்படுத்த நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அண்மையில் பாடகி உமாரா சிங்கவன்ச தேசிய கீதத்தைத் தவறான முறையில் பாடியிருந்தார். இந்த நிலையில் அதுதொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு, தேசிய கீதத்தை எவ்வாறு பாடுவது என்பது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கு முன்மொழிந்துள்ளது. (ச-இ)


## Vacancy

**Wanted a Female Accountant Urgently for a reputed organization in Jaffna.**

**Requirements:**
- ✓ Degree in Accounting or Finance
- ✓ Member or Passed Finalist of CA, CIMA or ACCA
- ✓ Minimum 2 years' experience in audit firm.
- ✓ Minimum 1 year experience in corporate sector.

➡ **Salary negotiable** ➡ **Forward your CV to:-** **hireinfo2023@gmail.com**

**Contact us on (77)766 4909**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

1. **மனேஜர்** - Lanka Tile Showroom - ஆண், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்.
2. Lanka Tile **விற்பனையாளர்** - ஆண்
3. **விற்பனை பிரதிநிதி** சீமெந்து - ஆண்
4. **கணக்குப்பதிவாளர்** - ஆண் / பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **குரு ஹாட்வெயார்**
**இல. 175, கரடிபோக்குச் சந்தி - கிளிநொச்சி.**
**0777 435 265**

குறிப்பு:
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.
நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றவுள்ள தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(CR 40437) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

- *யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **42 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
- *கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- *நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- *செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
- *3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு**

**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு **077 8743 204, 077 2880 152, 077 076 0389**

(CS 26046 B)A-1

## காணி விற்பனைக்கு உண்டு

- * யாழ்ப்பாணம் நுணாவில் காப்பற் வீதி முகப்புடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- * A9 வீதியில் இருந்து கனகம்புளியடி சந்தி செல்லும் பிரதான காப்பற் வீதி.
- * இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் மட்டுவில் மகா வித்தியாலயம் 1 km தூரம்.
- * குடியிருப்பு சூழல் கொண்ட தொகுதி.

**தொடர்பு:- 077 63 85 683**
**076 75 58 606**

(CS 26046 A)A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **08 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- *மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- *பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
- *நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- *ஒரு பரப்பின் விலை 3 லட்சம்மட்டும்
- *நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

**தொடர்பு:**
**076 057 0354, 076 8260 354**

(CS 25903)A-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 04 . 1969

மறைவு 20 . 08 . 2023

### திருமதி ஜீவசொறூபி (சொறூபி) கிருபாகரமூர்த்தி (கிருபா)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், Swiss, Basel ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜீவசொறூபி கிருபாகரமூர்த்தி கடந்த (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், தர்மலிங்கம் அன்னபூபதி தம்பதியரின் அன்பு மருமகளும், கிருபாகரமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும், மிதுர்ஷன் (இரசாயன வியல் பொறியியலாளர் - சுவிஸ்), யதுர்ஷன் (மாணவன் - சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவா (கனடா), ஜீவநந்தினி (லண்டன்), ஜீவசியாமினி (முகாமைத்துவசேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Friedhof Hornli, Hornliallee 70, 4125 Riehen மண்டபத்தில் இன்று (24.08.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.34, பொற்பதி வீதி,**
**கொக்குவில்.**

(cs 51755) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1950

மறைவு 23 . 08 . 2023

### காசிலிங்கம் அன்னலட்சுமி

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிலிங்கம் அன்னலட்சுமி அவர்கள் நேற்று (23.08.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் வள்ளியம்மையின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகளும் காசிலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் புஷ்பவதி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யுவநேசன் (சுவிஸ்), விஜிதா (பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, கிளிநொச்சி), கிரிஜா (ஆசிரியர், கிளி/ செல்வாநகர் அ.த.க பாடசாலை), லிங்கேசன் (பொறியியலாளர், LINCO Engineering Construction, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். ஸ்ரீவிசித்திரா (கொழும்பு), பகீரதன் (K.P.K கிளிநொச்சி), பத்மசிறி (காணி உரித்து ஆணையாளர் யாழ்ப்பாணம்),சகிலா (வைத்திய அதிகாரி, தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜீவன் - லதாங்கி, லதுசன் - லக்ஷ்சனா, கஜிந்தன், இந்துஷா, கஸ்தூரி,கீர்த்திகன், யதுலன், ஆரபி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**1/1, திருவையாறு,**
**கிளிநொச்சி.**

CR 40499 M-1

**தகவல்: குடும்பத்தினர்**
**077 2330 790 - மகன்**
**077 2484 406 - மருமகன்**
**077 5503 162 - மருமகன்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org